அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

செப்டம்பர் - 2024 | மரம் - 3 | கன்று - 9 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்;
**ஞானமுள்ள பிள்ளையைப்**
பெற்றவன் அவனால் மகிழுவான்.

நீதிமொழிகள் 23:24



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...



கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வெளிச்சம் உண்டாவதாக (ஆதி 1:3) என்பது தான் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனின் முதல் பேச்சு. ஆழத்தின் மீது பரவியிருந்த இருளை தேவன் ஒளியின் துணையினால் விரட்டுகிறார். வெறுமையாய் கிடந்த பூமி இப்போது வெளிச்சத்தின் விழுதுகளைப் பற்றிக் கொண்டு ஊஞ்சலாடுகிறது.

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது (மத்தேயு 4:15).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனும் ஒளி இருளை விலக்குவதற்காக வந்த ஒளி. இயேசு தன் ஊழியத்தை எங்கே துவங்கினார் தெரியுமா? கலிலேயா என்கிற பகுதியில். கலிலேயா என்பது ஏழைகளும், எளியவர்களும் வாழ்ந்த பகுதி. அக்கால மக்கள் கலிலேயர்களை மிகவும் தாழ்வாக கருதினர். ஆனால் ஆண்டவரோ அவர்கள் மத்தியில்தான் தன் ஊழியத்தை துவங்கினார்.

இந்த காட்சியைதான் மத்தேயு சுவிசேஷகர் மேற்கண்ட வசனத்தில் அழகாய் விளக்குகிறார், இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள் என்று. காரணம் அவர்கள் வாழ்க்கை தரம் அப்படி.

நம்முடைய வாழ்வும் ஏதோ ஒரு இருளில் தான் சிக்கியிருக்கிறது. பாவம், வறுமை, வியாதி, பிசாசு, போன்ற ஏதோ ஒரு இருள் நம்மை ஆட்கொண்டிருக்கிறது. ஆனால் எந்த இருள் நம்மை ஆட்கொண்டிருந்தாலும், கிறிஸ்துவாகிய உலகின் மெய்யான ஒளி நம்மில் வீசும்போது நாம் ஒளியின் சந்ததியாகிறோம். நம்மை ஆட்கொண்டிருக்கிற இருள் விலகியோடுகிறது.

அன்பானவர்களே, இந்த செப்டம்பர் மாதத்தில் கிறிஸ்துவாகிய மெய்யான உலகின் ஒளி நம்மேல் உதிப்பார். நம்மை சூழ்ந்திருக்கிற எந்த இருளும் இப்போதே நம்மை விட்டு அகன்று போகிறது. தைரியமாய் இம்மாதத்தை துவங்குவோம், கிறிஸ்துவின் வெளிச்சத்தில் துணிவுடன் சந்தோஷமாய் நடப்போம்.

மெய்யான ஒளியாம் இயேசு உங்கள் மேல் உதிக்கவும், அவரது வெளிச்சத்தில், துணிவுடன் இருளான துன்பங்களை மேற்கொண்டு வாழவும், சந்தோஷம் உங்கள் உள்ளத்தை ஆட்கொண்டு வழிநடத்தவும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

தாவரவியல்

# Mustard கடுகு உகாய்

அது (தேவனுடைய ராஜ்யம்) ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான்; அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது என்றார் (லூக்கா 13:19). இவ்வசனத்தைப் படிக்கும் போது கடுகு செடியா? மரமா? என்ற ஒரு சந்தேகம் வரலாம். வேதத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பது கடுகு மரம்தான். 4 வகையான கடுகு உண்டு.

1. Brassica Juncea இந்தியா மற்றும் சீனாவில் பயன்படுத்தும் செடி வகை.

2. Sinapis alba (மஞ்சள் கடுகு) ஐரோப்பாவில் பயன்படுத்தும் செடி வகை.

3. Brassica Nigra (கறுப்பு கடுகு) தென் அமெரிக்காவில் பயன்படுத்தும் செடி வகை.

4. Salvadora persica (மரக்கடுகு) மத்திய கிழக்கு நாடுகளில் பயன்படுத்தும் மரவகை. இது தமிழில் **உகாய் மரம்** என்றழைக்கப் படுகிறது.

இந்த Salvadora persica கடுகு மரம்தான் இயேசு கிறிஸ்து வாழ்ந்து வந்த நாடுகளில் அதிகமாக காணப்பட்டது. அதை தான் இயேசு கிறிஸ்து உவமையாக பரலோக ராஜ்யத்திற்கு ஒப்பிட்டு சொல்கிறார். இப்பொழுது புரிகிறதா? வேதத்தில் ஆவியானவர் எதையும் வீணாக ஒப்பிட்டு சொல்லுவது இல்லை. வேதத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஆவியானவரால் எழுதப்பட்டது. வேதாகமத்தை நம்முடைய அறிவினால் தேடாமல் பரிசுத்த ஆவியின் துணையைக் கொண்டு வேத வசனங்களை நாம் தியானித்து ஆராய்வோம் என்றால் ஆவியானவர் அநேக சத்தியங்களை நமக்கு அறிவித்து நம்மை போதித்து நடத்த வல்லமை உள்ளவராய் இருக்கிறார்.

**உகாய் மரம்** (மரக்கடுகு) வளைந்த தண்டு கொண்ட ஒரு மரமாகும். பொதுவாக 6-7 மீட்டர் (20-23 அடி) உயரம் இருக்கும். இந்த உகாய் மரத்தின் தாவரவியல் பெயர் சால்வடோரா பெர்சிக்கா (Salvadora persica). Salvadoraceae குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குறுமரமாகும்.

தமிழில் உகாய் என்றும், ஆங்கிலத்தில் மிஸ்வாக் என்றும், அரபியில் அராக் என்றும், உருதில் பீலு என்றும் அழைக்கப்படுகிறது. இம்மரத்தை Toothbrush Tree, Mustard Tree, Salt Brush Tree என்றும் அழைக்கின்றனர். இதன் தாயகம் பாரசீகம், மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்டது ஆகும். உகாய் மரங்கள் மருத்துவச் சிறப்புக்கொண்ட தொன்மையான மரங்களாகும்.

இந்தியாவின் வட மேற்கு கடற்கரைப் பகுதி, இஸ்ரேல், பாலஸ்தீனம், சிரியா, அரேபியா, ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆசியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இந்த மரங்கள் இருக்கின்றன.







உகாய் பாலை நிலத்து மரங்களில் ஒன்று. இம்மரம் பாலைவனம் போன்ற இடங்களிலும், கடலோர சமவெளி பகுதிகளிலும், உவர் நிலங்களிலும், கடும் வெப்பத்தையும், வறட்சியையும் தாங்கி செழிப்பாக வளரக்கூடியது. இது சங்க இலக்கியங்களில் பாலைத் திணைக்குரிய மரமாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் உகாய் மரங்கள் கிழக்கு கடலோர பகுதியில் ராமனாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக களர் உவர் நிலங்களில் ஒரு காலத்தில் அதிகம் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். உகாய் மரங்கள் தற்போது மிக அபூர்வமாக இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகின்றன. இம்மரங்கள், ராமநாதபுரம் மாவட்டத்தில் தாதனேந்தல், திருப்புல்லாணி அருகிலுள்ள மேலபுதுக்குடி, லாந்தை, கடுகு சந்தை சத்திரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்களிலும் காணப்படுகின்றன. இவை சுமார் 400 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான மரங்களாக உள்ளன. மேலும், கூராங்கோட்டையில் உள்ள ஒரு கோயிலில் உகாய் மரங்கள் இயற்கையாக வளர்ந்து வருகின்றன. இவை பல நூற்றாண்டுகள் பழமையானவை. இவ்வூர் கோயில் மற்றும் குண்டாற்றுக் கரைகளில் சுமார் 50-க்கும் மேற்பட்ட உகாய் மரங்கள் உள்ளன. இதை இப்பகுதியில் குணவாகை, வில்வவாகை எனப் பல பெயர்களில் அழைக்கிறார்கள். மேலும், இம்மரம் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி அடுத்த திருவாமூர் கோவிலிலும் உள்ளது. இம்மரம் 1400 ஆண்டுகள் பழமையானது. இதன் இலைகள் 6 சுவைகளை உடையது என்கின்றனர்.

முகம்மது நபியவர்கள் உகாய் குச்சிகளை பல் துலக்கப் பயன்படுத்தியுள்ளார் என குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதனால் உலகம் முழுக்க உள்ள இஸ்லாமிய மக்கள் கடந்த 1000 ஆண்டுகளாக உகாய் மரத்தின் குச்சிகளை பல்துலக்க பயன்படுத்தி வருகிறார்கள். பள்ளிவாசலில் பலவற்றிலும் இந்த மரங்களை நட்டு வளர்க்கிறார்கள்.

இதன் அடி மரம் மெலிதாக சொரசொரப்பாக சாம்பல் நிறத்தில் இருக்கும். இம்மரத்தின் தண்டு, புறாவின் முதுகுக்கு உவமையாகக் கூறப்படுகிறது. இலைகள் முட்டை வடிவில் இருக்கும். இதன் பூக்கள் சிறியதாக பசுமை படர்ந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும். இம்மரத்தின் பழங்கள் உருண்டையாய், நெல்மணிகளைப் போல மிகச் சிறியதாக இருக்கும். ஈரம் பட்டவுடன் வெடித்து விதைகள் சிதறிவிழும். இவை ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பூத்து மார்ச்சு மாதங்களில் காய்ப்பவை.

உகாய் மரத்தின் காயிலிருந்து வெடித்து உதிரும் விதை மிளகைப்போல் காரம் உடையது. பறவைகள் உகாய் விதைகளை உண்ணும். உகாய் விதை பற்றிய சுவையான செய்தி ஒன்று நற்றிணை 66 எண்ணிலுள்ள பாடலில் வருகிறது. இதனைப் பாடிய புலவர்

இனிசந்த நாகனார். இம்மரத்தின் விதையை மேய்ந்த புறா ஒன்று, அதன் காரத்தால் துடித்து, மரக்கிளையில் ஏறிக் கத்தியதாகவும், அப்போது அதன் கழுத்து மயிர் சிலிர்த்து, கண் சிவந்துபோனதாக அவர் பாடியுள்ளார். கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டில் காட்டப்படும் 99 மலர்களில் ஒன்று பாங்கர். இது உகாய் மரத்தின் பூவையே குறிப்பதாக கூறுவர்.




இம்மரத்தின் இலை, வேர், பட்டை, தண்டு, பூ, காய், பழம், விதை அனைத்தும் மருத்துவ குணங்கள் கொண்டவை.

இந்த மரங்கள் அடுப்பெரிக்க மிகவும் அற்புதமான எரிபொருள், நமீபியாவில் இந்த மரத்தின் இலைகள்தான் கால்நடைகள் விரும்பி சாப்பிடும் தீவனம். இதன் இலைகளை கீரைகளைப்போல சாப்பிடலாம். ஆப்பிரிக்க மக்கள் இன்றும் இதன் இலைகளை சமைத்து சாப்பிடுகிறார்கள். இம்மரத்தின் இலைகளை நெருப்பில் வாட்டி இளஞ்சூட்டுடன், மூட்டு விக்கம் உள்ள பகுதிகளின் மேல் வைத்து கட்டினால் மூட்டு வலி சரியாகும். இதன் இலைகளும், பழங்களும் சிறுநீரக கல்லுக்கும், வீக்கத்துக்கும் மிகச்சிறந்த மருந்தாகும். இம்மரத்தின் இலைகள், வேர் பட்டைகளை மைய அரைத்து கூழாக்கி பாம்பு கடித்த இடத்தில் வைத்து கட்டினால், அவ்விஷம் இறங்கி விடுவதோடு, வலியும் மறைந்து போகும். இதன் இலைகளை வெந்நீரில் ஊற வைத்து கஷாயமாக்கி குடித்தால் ஜலதோஷம், இருமல், காய்ச்சல் வரவே வராது. மூலநோய் உள்ளவர்கள் இதன் இலைகளை மைய அரைத்து கூழாக்கி ஆசனப் பகுதியில் தடவினால் அந்த நோய் இருந்த இடம் தெரியாது. இலையையும் விதையையும் அரைத்து தடவினால் தோல் நோய்கள் குணமாகும்.

இதன் விதைப்பொடி வயிற்று உபாதைகளை சரியாக்கும். பழங்களில் தயாரித்த கஷாயத்தை குடித்தால் காய்ச்சல் குணமாகும்.

இதன் பழங்கள் பச்சையாகவும், உலர வைத்தும் சாப்பிடலாம், இனிப்பாக இருக்கும். அவை மலச்சிக்கலைப் போக்கும் திறன் கொண்டவை. இதன் விதையை பொடி செய்து மூக்குப் பொடி போல் நாசியில் உறிஞ்சினால் ரினைடீஸ், சைனுசைட்டிஸ் குணமாகும்.

இதன் வேரிலிருந்து எடுக்கப்படும் குச்சிகள் பல்துலக்கப் பயன்படுத்தப்படுகின்றன. மிஸ்வாக் என்ற பெயரில் வரும் பற்பசை இம்மரத்தின் வேரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பற்பசை தயாரிக்கும் வணிக நிறுவனங்கள் இதன் வேரிலிருந்தும், பட்டைகளிலிருந்தும்தான் பற்பசைகளைத் தயாரிக்கிறாங்க. விதைகளிலிருந்து பிழிந்தெடுக்கும் எண்ணையை டிடெர்ஜெண்ட் எண்ணையாக பயன்படுத்துகிறார்கள்.

இதனை உலக சுகாதார நிறுவனம் வாய்ச் சுத்தத்துக்கான சிறந்த பொருளாகப் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கிறது. இதில் பல் சுத்தத்தைக் காக்கவும், பல் சம்மந்தமான நோய்களை சீராக்கும் குணமிருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

பல ஆயிரம் ஆண்டுகளாக கடும் வெப்பத்தையும், வறட்சியையும் தாங்கி செழிப்பாக வளர்ந்து வரும் இம்மரத்தின் அருமை தெரியாமல் சிலர் வெட்டி எறிந்துவிடுகிறார்கள். இம்மரம் வறட்சியைத் தாங்கி வளர்வதால் கடற்கரைப்பகுதிகள் முழுவதும் கருவை மரங்கள் வெட்டிவிட்டு இம்மரங்கள் வனத்துறை மூலம் பயிரிட்டு வளர்க்கலாம். இதன் மருத்துவப் பயன் மூலம் வருமானமும் கிடைக்கும். நிலத்தை மாசுபடுத்தி சுற்றுச்சூழலுக்கு பெரும் சவாலாக இருக்கும் கருவை மரங்களை அழித்து பூமியைக் காத்த புண்ணியமும் நமக்குக் கிடைக்கும்.

அவர் ஒரு தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசு அவர்களை நோக்கி, 'அறிவிலிகளே! தீர்க்கதரிசிகள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! கிறிஸ்து தாம் மகிமை அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!' என்றார். மேலும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கள் போக வேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர் போலக் காட்டிக் கொண்டார்.



அவர்கள் அவரிடம், ‘எங்களோடு தங்கும்; ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று; பொழுதும் போயிற்று’ என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள்.

அவர் அங்குத் தங்குமாறு அவர்களோடு சென்றார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, தேவனைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார்.

அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, ‘வழியிலே அவர் நம்மோடு பேசி, வேத வாக்கியங்களை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?’ என்று பேசிக் கொண்டார்கள்.

அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள். அங்கிருந்தவர்கள், ‘ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தரிசனமானார்’ என்று சொன்னார்கள்.

அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார் என்பதையும், அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்துகொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். ஆனால், அவர்கள் சொன்னதையும் சீஷர்கள் சிலர் நம்பவில்லை.

சீஷர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தார்கள். யூதர்களுக்கு அஞ்சிச் சீஷர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள். அது மாலை வேளை. அவர்கள் பந்தியில் அமர்ந்திருந்தபொழுது, இயேசு அங்கு வந்து, அவர்கள் நடுவில் நின்று, ‘உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக!’ என்று அவர்களை வாழ்த்தினார். எனவே, அவர்கள் திகிலுற்று, பயம் நிறைந்தவர்களாய், ஓர் ஆவியைக் காண்பதாய் நினைத்தார்கள்.

அதற்கு அவர், ‘நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் சந்தேகம் கொள்கிறீர்கள்? என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், நானே தான். என்னைத் தொட்டுப்பாருங்கள்; எனக்கு எலும்பும் சதையும் இருப்பதைக் காண்கிறீர்களே; இவை ஆவிக்குக் கிடையாதே’ என்று அவர்களிடம் கூறினார்.

இவ்வாறு சொல்லியபின், அவர் தம் கைகளையும், கால்களையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவர்களோ மகிழ்ச்சி மேலிட்டு, நம்பமுடியாதவர்களாய், வியப்புக்குள்ளாகி இருந்தார்கள்.

உயிருடன் எழுப்பப்பட்ட தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாமல், அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால், அவர் அவர்களுடைய நம்பிக்கையின்மையைக் கண்டித்தார்.

அப்போது அவர் அவர்களிடம், ‘உண்பதற்கு இங்கே உங்களிடம் ஏதேனும் உண்டா?’ என்று கேட்டார். அவர்கள் வேகவைத்த மீன் துண்டு ஒன்றை அவரிடம் கொடுத்தார்கள். அதை அவர் எடுத்து, அவர்கள்முன் அமர்ந்து உண்டார்.

பின்பு அவர் அவர்களைப் பார்த்து, ‘மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசன நூல்களிலும், சங்கீதங்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேறவேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே’ என்றார். அப்போது வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார்.

அவர் அவர்களிடம், ‘கிறிஸ்து துன்புற்று மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும், ‘‘பாவமன்னிப்புப் பெற மனம்மாறுங்கள்’’ என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்.

இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, ‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக! பிதா என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்’ என்றார். இதைச் சொன்ன பின், அவர் அவர்கள்மேல் ஊதி, ‘பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படாது’ என்றார்.

இயேசு அவர்களை அணுகி, ‘நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.’ விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற்கு 16:15-18) என்று கூறினார்.

இதோ, என் பிதா வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள்’ என்றார்.

பன்னிருவருள் ஒருவரான திதிமு என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீஷர்கள் அவரிடம், ‘ஆண்டவரைக் கண்டோம்’ என்றார்கள்.

தோமா அவர்களிடம், ‘அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்’ என்றார்.

எட்டு நாட்களுக்குப்பின், அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார்.

பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்தபொழுது, அவர்களுக்கு இயேசு தோன்றினார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும், இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, ‘உங்களுக்கு சமாதானம்!’ என்று வாழ்த்தினார்.

பின்னர் அவர் தோமாவிடம், ‘இதோ! என் கைகள், இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. சந்தேகம் தவிர்த்து நம்பிக்கைகொள்’ என்றார்.

தோமா அவரைப் பார்த்து, ‘என் ஆண்டவரே! என் தேவனே!’ என்றார்.

இயேசு அவரிடம், ‘நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்’ என்றார்.

வேறு பல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீஷர்கள் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இவைகள் எழுதப்பெற்றுள்ளன.

தொடரும்...

# காண்டாமிருகம்



''தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; **காண்டாமிருகத்துக்கொத்த** பெலன் அவர்களுக்கு உண்டு; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்'' (எண்ணாகமம் 24:8). காண்டாமிருகம் பெலனுள்ள ஒரு அற்புதமான விலங்காகும். சினங்கொண்டு எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவர்களை மூர்க்கத்தனமாக தாக்கும். இதனால் தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை காண்டாமிருகத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

''என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்'' (சங். 92:10) என்ற தாவீதின்மேல் இருந்த அபிஷேகம் படிப்படியாக அவரை உயர்த்திற்று. யுத்தங்களில் ஜெயத்தைத் தந்தது. ஒருவேளை உங்களை நீங்கள் தாழ்வாக எண்ணிக் கொண்டிருக்கலாம். மற்றவர்களால் அசட்டை பண்ணப்பட்டு பிரயோஜனமற்றவன் என்று புறக்கணிக்கப்பட்டிருக்கலாம். கர்த்தரோ உங்களை மகிமையாய் உயர்த்துவதற்கு வல்லமையுள்ளவர். கர்த்தர் உங்களைப் பார்த்து: ''முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்'' என்று சொல்லுகிறார்.

**காண்டாமிருகம் (Rhinoceros)** நிலத்தில் வாழும் விலங்குகளில் இரண்டாவது மிகப்பெரிய பாலூட்டி வகையாகும். Rhinocerotidae என்ற குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஒற்றைப்படைக் குளம்பி வகையைச் சேர்ந்தது. ஒற்றைக் கொம்பினைக் கொண்ட தாவர உண்ணி விலங்காகும். இது பெரிய உடல், சிறிய மூளை, குட்டைக் கால், மும்மடிப்புத் தோல், மூக்கில் கொம்பு என்று பல்வேறு தனிச் சிறப்பினைக் கொண்டது.



காண்டாமிருகம் = காண்டம் (காண்டு) + மிருகம்; காண்டு = சினம், துன்பம்

கரிய நிறமான சினம் கொண்ட, துன்பம் விளைவிக்கக்கூடிய ஒரு விலங்கு என்று பொருளாகும்.

காண்டாமிருகம் ஆப்பிரிக்கா, இந்தியா, ஜாவா மற்றும் சுமத்திரா தீவுகளில் வாழ்கின்றன. காண்டாமிருகங்கள் தனித்து வாழ்வதை விரும்புகின்றன. காண்டா என்னும் சொல்லுக்கு மிகப்பெரிய என்பது பொருளாகும். காண்டாமிருகத்தினை காண்டாவிருகம், காண்டா மிருகம், மூக்குக்கொம்பன், உச்சிக்கொம்பன் மற்றும்

கொந்தளம் என்று பல பெயர்களைக் கொண்டு அழைப்பர். இதன் வாழ் நாள் 35 முதல் 50 ஆண்டுகள் ஆகும்.

காண்டாமிருகத்தின் உடல் 1.8 மெட்ரிக் டன் எடையினைக் கொண்டது. காண்டாமிருகங்கள் பெரிய உடலினைக் கொண்டிருந்தாலும் மணிக்கு 40 கிலோமீட்டர் தூரம் வரை விரைவில் ஓடக்கூடிய திறன் படைத்ததாகும். மிக நுண்ணிய மோப்பத் திறனும், கேட்கும் திறனும் கொண்டது. ஆனால் பார்வைத் திறன் மிகக் குறைவாகும். தனது பற்களை உணவு உண்பதற்கு மட்டுமல்லாமல் சண்டையிடுவதற்கும் பயன்படுத்துகின்றன. ஆப்பிரிக்க காண்டாமிருகங்களுக்கு முன் பற்கள் கிடையாது. ஆகையால் முன்கடைவாய்ப் பற்களைக் கொண்டே உணவை மென்று உண்ணும். சண்டையிடும் போது எதிரியினைப் பற்களால் தாக்கிக் கொன்று விடும். காண்டாமிருகம் புற்கள், இலைகள், பழங்கள் மற்றும் கிழங்குகள் போன்றவற்றை உணவாக உண்ணுகின்றன. பெரும்பாலும் இரவு நேரங்களில் உணவைத் தேடிச் செல்கின்றன.

காண்டாமிருகத்தின் மூளை மிகவும் சிறியது. 400 முதல் 600 கிராம் எடை கொண்டது. காண்டாமிருகம் 6 அடி உயரம் வரை வளரும். நன்கு வளர்ந்த ஆண் காண்டாமிருகம் பெண் காண்டாமிருகத்தை விடக் கூடுதல் எடையைக் கொண்டிருக்கும். ஆண் காண்டாமிருகம் 2200 முதல் 3000 கிலோ எடையும், பெண் காண்டாமிருகம் 1600 கிலோ எடையிலும் இருக்கும். காண்டாமிருகத்திற்குக் கோபம் வந்தால் உடலெல்லாம் இரத்தம் போல் சிவப்பாக வியர்த்துக் கொட்டும். மிகவும் மூர்க்கத்தனமாகக் காணப்படும்.

காண்டாமிருகங்களின் சிறப்புகளில் ஒன்றாக அதன் தோலைக் கூறலாம். இதன் தோல் வெளிப்புறம் தடித்து உட்புறம் மூன்று மடிப்புகளைக் கொண்டிருக்கும். இத்தோல் 1.5 முதல் 5 செ.மீ தடித்துக் காணப்படும். தோலின் மேல் பகுதியில் பழுப்பு நிறமும் மடிப்புகளுக்கிடையே வெளிறிய சிவப்பு நிறமும் காணப்படுகின்றன. காண்டாமிருகத்தை சதுப்பு நில விலங்கு என்றும் கூறுவர். இவ்விலங்கு சகதியில் படுத்துப் புரள்வதில் அலாதிப் பிரியம் கொண்டது. பகற்பொழுதின் அதிக நேரத்தை சகதியில் புரள்வதிலே செலவிடுகின்றன. இச்செயலின் மூலம் வெயிலின் தாக்கம், பூச்சிகள், பேன் மற்றும் உண்ணிகளின் தொல்லைகளிலிருந்து மீள்கின்றன. மேலும் தோலைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

பெண் காண்டாமிருகங்கள் தமது குட்டியை 15 முதல் 16 மாதங்கள்வரை கருவில் சுமக்கும். ஒரு கன்றினை மட்டும் ஈனும். அடுத்த கன்றினைப் பெறுவதற்கு 34 முதல் 51 மாதங்களாகும். குட்டி 60 கிலோ எடை வரை இருக்கும். ஒரு வாரம் வரை தன் குட்டிக்கு பாலூட்டும். தாய் காண்டாமிருகங்கள் 2 முதல் 4 வருடங்கள் குட்டியை தன் கூடவே அழைத்துச் செல்லும். பிற காண்டாமிருகம் கன்றை நெருங்கினால் தாய் விரட்டி அடிக்கும். கன்றுகள் பிறந்து ஆறு ஆண்டுகளுக்கு பிறகு அவற்றின் கொம்புகள் வெளிப்படும். பெரும்பாலான வளர்ந்த விலங்குகளுக்கு கொம்பு ஏறத்தாழ 25 செ. மீ நீளம் வளரும். குட்டி காண்டாமிருகங்களை காட்டுப்பூனைகள், முதலைகள், சிங்கம், சிறுத்தை, புலி, கழுதைப்புலி மற்றும் காட்டு நாய்கள் சிலநேரம் வேட்டையாடி உணவாக உட்கொள்ளும்.

பிற விலங்குகளிடமிருந்து காண்டாமிருகத்தைத் தனித்துக் காட்டுவது அதன் மூக்குக்கொம்புகள் தான். பொதுவாக விலங்குகளுக்குக் கொம்புகள் தலையில் தானே வளரும். ஆனால் காண்டாமிருகத்திற்கு மூக்கின் நடுக்கோட்டில் ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் வளரும். முடி மற்றும் நகங்கள் வளர்வதற்குக் காரணமான KERATIN என்ற வேதிப்பொருள் தான் கொம்புகள் வளர்வதற்கும் காரணமாக இருக்கிறது. கொம்புகளின் நடுப்பகுதி Calcium மற்றும் Melanin கொண்டது. நடுப்பகுதி திடமாகவும், வெளிப்பகுதி மென்மையாகவும் இருக்கிறது. 20 செமீ முதல் 100 செமீ வரை கொம்புகள் வளர்கின்றன. இந்திய வகை காண்டாமிருகங்களுக்கு கொம்புகளின் நீளம் குறைவாகவே இருக்கிறது.

ஆப்பிரிக்க வகை காண்டாமிருகங்களின் கொம்புகள் அதிக நீளமாக வளர்கின்றன. ஆண் காண்டாமிருகம் மற்றும் பெண் காண்டாமிருகம் இரண்டிற்கும் கொம்பிருக்கும்.

காண்டா மிருகத்தின் கொம்புகள் எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள ஒரு ஆயுதமாக செயல்படும். எதிரிகளை மூர்க்கத்தனமாக கொம்பினாலேயே தாக்கும். மேலும் உணவைத் தேடி அலையும்போது மண்ணை தோண்டுவதற்கும், புல் பூண்டு, கிழங்குகளை மண்ணுக்கு அடியில் தேடவும், சிறு புதர்களை வேரோடு பிடுங்கி எறியவும், கரையான் புற்றுகளை இடித்து தள்ளுவதற்கும் கொம்பு உதவுகிறது. கொம்புகள் உடைந்தாலோ, முறிபட்டாலோ வளர்ந்து கொண்டே இருக்கும்.

உலகில் 5 வகை காண்டாமிருகங்கள் உள்ளன. இதில் வெள்ளை இனம், கருப்பு இனம் ஆகிய இரு வகைகள் ஆப்பிரிக்க நாட்டில் உள்ளன. சுமித்திரன் இனம், இந்தியன் இனம், ஜாவன் இன வகை காண்டாமிருகங்கள் தெற்கு ஆசியக் காடுகளில் உள்ளன. ஆப்பிரிக்காவின் வெள்ளை, கருப்பு மற்றும் சுமித்திரன் இன காண்டாமிருகங்கள் இரு கொம்புகளை கொண்டவை. வெள்ளை காண்டாமிருகத்தின் முதுகில் மட்டும் திமில் போன்ற அமைப்பு இருக்கும். இதில் பெரிய கொம்பு மூக்கின் நுனிப்பகுதியிலும், சிறிய கொம்பு அதற்கு அடுத்ததாகவும் இருக்கும். இந்திய இனம், ஜாவன் இனம் காண்டாமிருகங்கள் ஒரு கொம்பை மட்டுமே கொண்டுள்ளன. இந்தியன் இனமானது ஒற்றை கொம்பு காண்டாமிருகம் என்றே அழைக்கப்படுகிறது. இந்தியாவில் தற்போது அசாம், மேற்கு வங்கம், பீகாரில் இந்தியன் இனம் காண்டாமிருகங்கள் மட்டுமே உள்ளன. இந்தியாவில் காண்டாமிருகங்கள் அசாம், மேற்கு வங்கம் மற்றும் பீகார் பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தியாவில் 3,262 காண்டாமிருகங்கள் உள்ளன.


காண்டாமிருகத்தின் கொம்புகளில் மருத்துவ குணம் இருப்பதாகவும், புற்றுநோய்க்கு மருந்தாக பயன்படுவதாகவும் வியட்நாம், சீனா போன்ற சில நாடுகளில் மூட நம்பிக்கைகள் உண்டு. கொம்புகளை அரைத்து பொடியாக ஆக்கி அதை முகர்வதை வியட்நாம் மக்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். மேலும் அதன் கொம்புகள் நகைகளாகவும், கத்தி போன்ற ஆயுதங்களுக்குப் பிடிகளாகவும் செய்யப்படுகின்றன. காண்டாமிருகங்கள் தந்தத்தைவிட விலை மதிப்புமிக்க அதன் கொம்புகளுக்காக வேட்டையாடப்பட்டு கொம்புகள் பல்வேறு நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன. தற்போதைய நிலவரப்படி, ஒரு கிலோ எடையுள்ள காண்டாமிருகத்தின் கொம்பு $ 400,000 வரை விலை போகிறது. தெற்கு ஆசிய நாடுகளில் உள்ள வியட்நாம் காண்டாமிருக கொம்புக்காக வியாபார மையமாக விளங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுமார் 5,00,000 காண்டாமிருகங்கள் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தன. ஜாவன், சுமத்திரன் காண்டாமிருகங்கள் ஆசியாவில் அழியும் நிலையில் உள்ளன. IUCNன் அறிக்கையின்படி, 15,942 வெள்ளை காண்டாமிருகங்களும், 6,195 கருப்பு காண்டாமிருகங்களும், 4,014 ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களும், 76 ஜாவன் காண்டாமிருகங்களும், 34-47 சுமத்திரன் காண்டாமிருகங்களும் உலகளவில் உள்ளன. காண்டா மிருகம் வேகமாக அழிந்து வரும் விலங்கினங்கள் பட்டியலில் இருக்கிறது. காண்டாமிருகங்களை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 22ம் தேதி உலக காண்டாமிருக தினம் கொண்டாடப்படுகிறது.

ஏதோ ஒரு விலங்கு அழிந்தால் நாம் ஏன் கவலைக் கொள்ள வேண்டும்? என்று நினைக்கக்கூடாது. ஏதோ ஒரு விலங்கின் அழிவு மனித அழிவுக்கு வழிவகுக்கலாம் என்கிறார்கள் சூழலியலாளர்கள்.


உலகின் தனித்துவமான உயிரினமாக கருதப்படும் காண்டாமிருகங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**மூக்குக்கொம்பன்** தன் குட்டியிடம் செல்வதற்கு அதற்கு சரியான வழிகாட்டுங்கள்




# ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்!


காண்டாமிருகத்தின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.




# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். - நீதிமொழிகள் 3:5-6




கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார். - ஏசாயா 61:10




கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்;
திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு. - சங்கீதம் 27:14




நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்
பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு... - ரோமர் 15:5

# கானா... கல்யாணம்...

ஒரு திருமணம் கலிலேயாவிலுள்ள கானா என்னும் ஊரில் நடந்தது. இயேசுவின் தாய்க்கு அழைப்பு இருந்தது. அவர் இயேசுவையும், சீடர்களையும் அழைத்துக் கொண்டு நாசரேத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் இருந்த கானாவை நோக்கி நடந்தார்கள்.

திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மக்கள் ஆடலும் பாடலுமாக திருமண அரங்கையே விழா மேடையாக்கிக் கொண்டிருந்தார்கள். அன்றைய நாட்களில் திருமண விழாக்களில் முக்கிய இடம் பிடிப்பது திராட்சை இரசம். இந்த திருமண விழாவிலும் சுவையான திராட்சை இரசம் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. பந்தி விசாரிப்புக்காரர் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தார். திருமண விழாவில் ஏதேனும் குறை ஏற்பட்டால் அவருடைய தலை தான் உருளும் என்பதால் அவர் அனைத்தையும் பரபரப்புடன் கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென திருமண அரங்கில் சிறு சலசலப்பு.

‘இங்கே.. கொஞ்சம் திராட்சை இரசம் கொண்டு வாருங்கள்...’

‘திராட்சை இரசம் கேட்டேனே கிடைக்கவில்லையே’

ஆங்காங்கே குரல்கள் மெலிதாக எழ ஆரம்பித்தன. வீட்டின் பின்புறத்திலோ பணியாளர்கள் திகைத்துப் போய் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தார்கள். பணியாளர்கள் நிற்கும் நிலைமையைப் பார்த்த இயேசுவின் தாய்க்கு ஏதோ பிரச்சினை என்பது புரிந்தது.

எனவே அவர்களிடம் சென்று, ‘என்ன பிரச்சினை? மக்கள் திராட்சை இரசம் கேட்கிறார்கள். நீங்கள் பரிமாறவில்லையே! செல்லுங்கள்’ என்றார்.

‘அம்மா. திராட்சை இரசம் தீர்ந்து விட்டது!’

‘என்ன இரசம் தீர்ந்து விட்டதா?’’ மரியாள் மெலிதான அதிர்ச்சியுடன் கேட்டார்.

‘ஆம் அம்மா. திடீரென சென்று இரசம் வாங்கி வரவும் முடியாது. நாங்கள் வாங்கி வரும் முன் விழா முடிந்து விடும்’ பணியாளனின் கண்களில் கண்ணீர்.

இவர்களுக்கு எப்படியாவது உதவவேண்டும் என்று மரியாள் முடிவெடுத்தார். தன் மகன் தேவனின் வல்லமைபெற்றவர், அவர் நினைத்தால் எது வேண்டுமானாலும் நடக்கும் என அவர் நம்பினார். எனவே இயேசுவை அழைத்தார்.



‘அம்மா அழைத்தீர்களா’

‘ஆம்.. மகனே. திருமண விழாவில் ஒரு குறை’. இயேசு தாயின் முகத்தைப் பார்த்தார்.

‘இரசம் தீர்ந்து விட்டது.’

‘அம்மா. என்னுடைய நேரம் இன்னும் வரவில்லை’ இயேசு அன்னையின் காதுகளில் கிசுகிசுத்தார்.

மரியாள் வேலையாட்களை அழைத்தார், ‘இதோ இவர் சொல்வதையெல்லாம் நீங்கள் செய்யுங்கள்’.

இயேசுவைக் சுட்டிக் காட்டி சொன்னார். அவர்கள் இயேசுவை கேள்விப் பார்வை பார்த்தார்கள். இயேசுவின் கைகளில் ஒன்றும் இல்லை. விழாவில் திராட்சை இரசம் இல்லை. இவர்களுடைய வீடும் அருகில் இல்லை. இவர் எப்படி உதவ முடியும் என்ற கேள்வியே அனைவரின் பார்வையிலும் இருந்தது.

இயேசு சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கே ஆறு கற்சாடிகள் இருந்தன.

‘இதென்ன சாடிகள்?’ இயேசு கேட்டார்.

‘சுத்திகரிக்கும் சடங்குகளுக்காக இதை இங்கே வைத்திருக்கிறோம். இப்போது இவற்றில் ஒன்றும் இல்லை’

‘இதில் எத்தனை குடம் தண்ணீர் பிடிக்கும்?’

‘ஒவ்வொன்றிலும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும்’

‘சரி. இந்த ஆறு கற்சாடிகளிலும் தண்ணீர் நிறையுங்கள்’

இயேசு சொல்ல, பணியாளர்களுக்கு மீண்டும் குழப்பம். ஆனாலும் ‘இவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்’ என்று மரியாள் சொல்லியிருந்தாரே. பணியாளர்கள் அவ்வாறே செய்தனர். மிக விரைவாக ஆறு கற்சாடிகளிலும் விளிம்பு வரை தண்ணீர் நிறைத்தார்கள். இயேசு சிறிது நேரம் கண்களை மூடி செபித்தார். பின் கைகளை நீட்டி அந்த சாடிகளை ஆசீர்வதித்தார்.

‘சரி.. இப்போது இதை மொண்டு பந்திவிசாரிப்புக்காரரிடம் கொடுங்கள்’ இயேசு சொன்னார்.

‘என்ன சொல்கிறீர்கள்? எங்களுக்குத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு வரவில்லை. திராட்சை இரசம் தான் தீர்ந்து விட்டது’.

பணியாளர்கள் மனதில் குழப்பம். ஆனாலும் இயேசு சொன்னபடியே தண்ணீரை அள்ளினார்கள், அதிர்ந்து போனார்கள். தண்ணீர் திராட்சை இரசமாய் மாறியிருந்தது. பரபரப்புடன் பந்திவிசாரிப்புக்காரரை நோக்கி ஓடினார் ஒரு பணியாளர்.

‘ஐயா... இதோ திராட்சை இரசம்’

‘திராட்சை இரசமா? அது தான் தீர்ந்து விட்டதே. எங்கிருந்து கிடைத்தது இது?’ ஆச்சரியத்துடன் கிசுகிசுப்பாய்க் கேட்டுக் கொண்டே பந்திவிசாரிப்புக்காரர் அந்த திராட்சை இரசத்தைச் சுவைத்தார்.

‘ஆஹா... அருமையான இரசம்... அருமையான இரசம். எங்கே போய் வாங்கினீர்கள்? எங்கிருந்து கிடைத்தது?’ பந்திவிசாரிப்புக்காரர் குழம்பினார்.

‘எல்லோரும் நல்ல ரசத்தை முதலில் பரிமாறுவார்கள், இங்கே கடைசி வரை நல்ல ரசத்தை வைத்திருக்கிறீரே என மணமகனை அழைத்து பந்திவிசாரிப்புக்காரர் பாராட்டினார்.

## இயேசு செய்த முதல் அற்புதமான கானாவூர் கல்யாணம் தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.



**மணவாளன்**
**சீஷர்கள்**
**யூதர்கள்**
**இயேசு**
**மரியாள்**
**வேலைக்காரர்**
**ஆறு கற்சாடிகள்**

**கலிலேயா**
**கானா**
**கலியாணம்**
**திராட்சரசம்**
**தண்ணீர்**
**மகிமை**
**அற்புதம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ணீ | இ | ம | ண | வா | ள | ன் | வே | லே | ற் |
| த | யே | ண் | ம | கி | மை | ம | லை | ஆ | தி |
| அ | சு | லி | யா | சீ | யூ | ரி | க் | று | ரா |
| சீ | ஷ | ர் | க | ள் | த | யா | கா | க | ட் |
| க | லி | யா | ண | ம் | ர் | ள் | ர | ற் | ச |
| த | னா | க | ர் | பு | க | கா | ர் | சா | ர |
| ண் | யூ | லி | யா | ஷ | ள் | ள் | யே | டி | ச |
| ணீ | க | லே | அ | ற் | பு | த | ம் | க | ம் |
| ர் | லை | யா | ண | மை | கா | னா | கி | ள் | லி |



# மதுரமான திராட்சரசம்

**யோவான் 2:1-12ஆம் அதிகாரம் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. இயேசு எந்த விழாவிற்கு அழைக்கப்பட்டார்.
2. இயேசுவைத் தவிர, கல்யாணத்திற்கு அழைக்கப் பட்டவர்கள் யார்?
3. கல்யாணம் எந்த ஊரில் நடைபெற்றது?
4. இயேசுவின் தாயின் பெயர் என்ன?
5. கல்யாணத்தில் எத்தனை கற்ஜாடிகள் இருந்தன?
6. ஒவ்வொரு ஜாடியிலும் எத்தனை குடம் தண்ணீர் நிரப்ப முடியும்?
7. இயேசு வேலைக்காரரை நோக்கி ஜாடியிலே எதை நிரப்ப சொன்னார்?
8. இயேசு தண்ணீரை என்னவாக மாற்றினார்?
9. பந்திவிசாரிப்புக்காரன் திராட்சரசத்தை ருசித்த பிறகு அவர் யாரை அழைத்தார்?
10. கல்யாண விருந்துக்குப் பிறகு இயேசு அடுத்து எங்கு சென்றார்?

விடைகள் 21ஆம் பக்கம் பார்க்கவும்

# பெருந்தன்மை

ஆலயத்தின் முன்னால் இருந்தது அந்தக் காணிக்கைப் பெட்டி. செல்வந்தர்கள் வந்தார்கள் தங்கள் கைகளில் அள்ளி வந்திருந்த பணத்தை அதில் கொட்டினார்கள். தங்கள் பெருந்தன்மையை அடுத்தவர்கள் பார்க்கவேண்டும் எனும் நோக்கம் அவர்களுக்கு இருந்தது. அப்போது ஒரு ஏழை விதவையும் வந்தாள். அவளுடைய சுருக்குப் பையில் இரண்டே இரண்டு காசுகள் இருந்தன. அதைப் போட்டாள். அமைதியாய்க் கடந்து போனாள். அள்ளிக் கொட்டியவர்கள் இந்தப் பெண் கிள்ளிப் போட்டதை ஏளனமாய்ப் பார்த்திருக்கக்கூடும்.

ஓரமாய் அமர்ந்திருந்த இயேசு சொன்னார். ‘‘இந்த உண்டியலில் அதிகமாய்க் காணிக்கை போட்டது அந்த ஏழை விதவை தான். எல்லோரும் தன்னிடமிருந்ததில் மிகுதியானதைப் போட்டார்கள். இவளோ தன்னிடம் இருக்கும் முழுவதையும் போட்டுவிட்டாள்’’ என்றார்.

பெருந்தன்மை என்பது பிச்சையிடுதல் அல்ல. பெருந்தன்மை என்பது தேவையில் இருக்கும் இன்னொருவரின் தேவையை நிறைவேற்றும் மனநிலையும், செயல்பாடும். ஒரு மனிதன் தேவையில் இருக்கும்போது, ஒரு அன்பின் செயலுக்கான கதவு நம் முன்னால் திறக்கிறது என்பார்கள். அந்தக் கதவைக் கண்டும் காணாததும் போல் நாம் சென்று விடும்போது மனித நேயத்தை மறுதலித்தவர்களாய் மாறிவிடுகிறோம். தன்னலம் தாண்டிய இடங்களில் மட்டுமே பெருந்தன்மை கிளை விட்டுச் செழிக்க முடியும்.

எட்டு வயதுச் சிறுவன் அவன். அவனுடைய ஆறுவயதுத் தங்கைக்கு லூகேமியா நோய். இரத்தம் மாற்றினால் தான் அவள் உயிர்பிழைப்பாள் என்கின்றனர் மருத்துவர்கள். சிறுவனுடைய இரத்தம் ஒத்துப் போகுமா என சோதித்தார்கள். சரியாக பொருந்தியது. ‘‘தங்கைக்கு இரத்தம் கொடுக்க சம்மதமா?’’ மருத்துவர்கள் கேட்டார்கள். கொஞ்ச நேரம் யோசித்த சிறுவன் ‘‘சரி’’ என்றான். அவனிடமிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாக எடுக்கப்பட்டது. அது சிறுமியின் உடலுக்குச் சென்று கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின், அருகில் இருந்த நர்சை அழைத்த சிறுவன் கேட்டான், ’’நான் எப்போது சாகத் துவங்குவேன்?’’.

நர்ஸ் அதிர்ச்சியடைந்தாள். தனது இரத்தத்தைக் கொடுத்தால் தங்கை பிழைத்துக் கொள்வாள். ஆனால் தான் இறந்து விடுவோம் என சிறுவன் நினைத்திருக்கிறான். தனது உயிர் போனாலும் பரவாயில்லை. தனது தங்கை பிழைக்கட்டும் என முடிவு செய்திருக்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். இது தான் தன்னலமற்ற அன்பின் வடிவம்!

‘‘நான்’’ என்பதை பின்னால் நிறுத்தி ‘‘நீ, உனது விருப்பம்’’ என்பதை முன்னில் நிறுத்துகையில் உறவுகள் செழிக்கத்



துவங்குகின்றன. ஒரு குடும்பத்தில் அனைவரும் அத்தகைய சிந்தனை கொண்டிருந்தால் அந்தக் குடும்பம் ஆனந்தத்தின் சோலையாகவே பூத்துச் சிரிக்கும்.

நமக்கு என்ன கிடைக்கிறது என்பது நமது வாழ்தலின் அடிப்படையாகிறது. நாம் என்ன கொடுக்கிறோம் என்பதே நமது வாழ்வின் அடிப்படையாகிறது என்கிறார் வின்ஸ்டன் சர்ச்சில். கொடுத்தல் என்பது வெறும் பணம் சார்ந்ததல்ல! அது உங்கள் திறமை, நேரம், அருகாமை என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் மன்னிப்பு, ஆறுதல் என அதன் முகம் வேறு படலாம். வகைகள் எதுவானாலும் வேர் என்பது பெருந்தன்மை என்பதைப் புரிந்து கொள்வோம்.

பெருந்தன்மை என்பது வெறுமனே மனதுக்குள் சொல்லிப் பார்க்க வேண்டிய கவிதையோ, பாடலோ அல்ல. அது ஒரு செயலாக வெளிப்பட வேண்டிய உயரிய குணாதிசயம். ஒவ்வொரு இடத்துக்குச் செல்லும் போதும் பிறருக்கு உங்களால் என்ன செய்ய முடியும் எனும் சிந்தனை மனதின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கட்டும். பெருந்தன்மையைக் கவனமாகச் செயல்படுத்தத் துவங்கினாலே அது நமது வாழ்வின் பாகமாக மாறிவிடும்.

யாருக்கு உதவி செய்தால் அவர்களால் திருப்பி உங்களுக்குத் தர இயலாதோ அந்த அளவுக்கு ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கு உதவுவது உயரிய நிலை. நமது வீட்டின் கதவுகள் ஏழைகளுக்காகவும் திறந்தே இருப்பது பெருந்தன்மையின் அழகிய நிலை. பெருந்தன்மை உடையவர்கள் தான் மனதளவில் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதாகச் சொல்கிறது ஆய்வு ஒன்று.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். கொடுப்பது என்பது இழப்பது அல்ல!

உன்னால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை விட அதிகமாய்க் கொடுப்பது தான் பெருந்தன்மை. உன்னை விட எனக்கே அதிகம் தேவையாய் இருக்கும் ஒரு பொருளைத் தருவதில் இருக்கிறது பெருந்தன்மை.

19ஆம் பக்கத்தின் விடைகள்

## மதுரமான திராட்சரசம் - பதில்கள்

1. கல்யாணத்திற்கு, 2. இயேசுவின் சீஷர்கள் மற்றும் மரியாள், 3. மரியாள்,
4. கலிலேயாவிலுள்ள கானாவில், 5. ஆறு கற்ஜாடிகள், 6. இரண்டு மூன்று குடம்,
7. தண்ணீரை, 8. திராட்சரசமாக 9. மணவாளனை, 10. கப்பர்நகூமுக்கு

**பரிசுத்த வேதாகமத்தில் காண்டாமிருகம் என்ற சொல் வரும் வசனங்களை எழுதுக**

விடைகள் 25ஆம் பக்கம் பார்க்கவும்

# மன்றாடுவோம்



சமீப காலமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வக்கிரங்கள் அதிகரித்துக்கொண்டு வருவது கவலை அளிப்பதாக உள்ளது.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், கடந்த 2012-ம் ஆண்டு ஜூன் 19-ந் தேதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் தேதி இந்த சட்டம் அமலுக்கு வந்தது. இதையடுத்து பாலியல் சீண்டல், பலாத்காரம், குழந்தைகள் ஆபாச படம் உள்ளிட்டவைகளில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க இந்த சட்டத்தை மத்திய - மாநில அரசுகள் தீவிரமாக அமல்படுத்தி வருகிறது.

இருப்பினும் குற்றங்கள் குறைந்ததா என்றால் இல்லை என்றே சொல்லும் அவலநிலை உள்ளது. போக்சோ வழக்குகள் தொடர்பாக தெரிவிக்கப்படும் புள்ளி விவரங்கள் மிகவும் அதிர்ச்சி அளிக்கக்கூடியவையாக உள்ளது.

இந்தியாவில் கடந்த மே மாத நிலவரப்படி 2,53,000 போக்சோ வழக்குகள் நிலுவையில் இருப்பதாக இந்திய குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் அறிக்கை கூறுகிறது.

இந்த அதிகப்படியான எண்ணிக்கை குழந்தைகளின் நலன் மீதான பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளது. இந்தியாவை பொறுத்தமட்டில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகளில் உத்தரபிரதேசம் முதலிடத்தில் உள்ளது.

கடந்த மே மாதம் புள்ளி விவரப்படி உத்தரபிரதேசத்தில் 85,524 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக பீகாரில் 18,405 வழக்குகளும், ஒடிசாவில் 10,415 வழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன.

தமிழகத்தில் 4,454 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை பெற்றுக்கொடுக்க தமிழக அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், இந்த குற்ற செயலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதில் தமிழகமும் தப்பவில்லை.

போக்சோ வழக்கை பொறுத்தமட்டில் 100 வழக்குகளில் விசாரணை முடிவடைந்தால், அவற்றில் 80 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு விடுகிறார்கள். அதாவது, சராசரியாக 20 சதவீத வழக்குகளில் மட்டுமே தண்டனை கிடைக்கிறது.

போக்சோ வழக்குகளில் விசாரணை தாமதமாவதற்கு காரணங்கள் மற்றும் குற்றவாளிகள் அதிகளவில் விடுதலை செய்யப்படுவதற்கு காரணங்கள் குறித்து கண்டறிந்து அவற்றை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெபிப்போம்.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட, பாலியல் வன்கொடுமைகள் நடைபெறாமல் இருக்க, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பயம் நீங்க தேவனிடம் மன்றாடுவோம்.

# மன்னிப்பு




ஆப்பிரிக்காவில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஓர் அரசர் இருந்தார், அவரிடம் பத்து காட்டு நாய்கள் இருந்தன. தவறு செய்த தனது ஊழியர்களை அந்த காட்டுநாய்களுக்கு இரையாக்குவார். ஒருநாள் வேலைக்காரர்களில் ஒருவர் தவறான ஒரு கருத்தை சொன்னார், அரசருக்கு கோபம் வந்துவிட்டது.

'இவனை நாய்களுக்கு தூக்கி எறியுங்கள்' என்று கட்டளையிட்டார்.

'வேலைக்காரன் கெஞ்சினான்.. நான் உங்களுக்கு பத்து வருடங்களாக சேவை செய்தேன். நீங்கள் இப்படி ஒரு தண்டனையை எனக்குத் தரலாமா? தயவுசெய்து என்னை அந்த நாய்களுக்கு தூக்கி எறிவதற்கு முன் பத்து நாட்கள் அவகாசம் தாருங்கள்!'

ராஜா ஒப்புக்கொண்டார். அந்த பத்து நாட்களில், வேலைக்காரன் நாய்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் காவலரிடம் சென்று, அடுத்த பத்து நாட்களுக்கும், தான் அந்த நாய்களுக்கு சேவை செய்ய விரும்புவதாகக் கூறினான். காவலர் குழப்பமடைந்தார், ஆனாலும் ஒப்புக்கொண்டார்.

அந்த வேலைக்காரன் அந்த நாய்களுக்கு உணவளித்தான், அவற்றைச் சுத்தம் செய்தான், குளிப்பாட்டவும் தொடங்கினான். அவற்றிற்கு அனைத்து விதமான வசதிகளையும் வழங்கி அன்பு காட்டினான். பத்து நாட்கள் முடிந்தது. வேலைக்காரனைத் தண்டிப்பதற்காக நாய்களிடம் தூக்கி எறியும்படி அரசர் உத்தரவிட்டார். அவன் தூக்கி எறியப்பட்டபோது, அவை ஓடிவந்து அவனின் கால்களை நக்கத் தொடங்கின. இதைக் கண்டு அனைவரும் வியந்தனர்!

இதைப் பார்த்து திகைத்த அரசன், 'என் நாய்களுக்கு என்ன நேர்ந்தது?' என்றான்.

வேலைக்காரன் பதிலளித்தான், 'நான் பத்து நாட்களுக்கு மட்டுமே இந்த நாய்களுக்கு சேவை செய்தேன், அவை என் சேவையை மறக்கவில்லை. நான் உங்களுக்கு பத்து வருடங்கள் சேவை செய்தும் என் முதல் தவறைக்கூட மன்னிக்காமல் நான் உங்களுக்கு செய்த அனைத்தையும் மறந்து என்னை தண்டிக்க உத்தரவிட்டீர்கள்!'

அரசர் தனது தவறை உணர்ந்து வேலைக்காரனை விடுவிக்க உத்தரவிட்டார். நம்மிலும் எத்தனையோபேர் இப்படி இருக்கிறோம். ஒருவர் செய்த ஒரு தவறுக்காக, அவர் எமக்கு செய்த உதவிகளை எல்லாம் மறந்து அவரை வாழ்நாளெல்லாம் ஒதுக்கி வாழும் எத்தனையோபேர் எம்மிலும் இல்லாமல் இல்லை.

மன்னிப்பு எனும் ஒற்றை வாக்கியத்துக்கு இருக்கும் வலிமை அலாதியானது. தமிழில் மட்டுமல்ல எந்த மொழியிலும் மனிதனாகப் பிறந்த அனைவரும் அள்ளி அணைக்க வேண்டிய குணாதிசயம் மன்னிப்பு. இந்த மன்னிப்பு எனும் விஷயம் மட்டும் இருந்து விட்டால் உலகில் நிலவும் பிரச்சினைகளில் பெரும்பாலானவை அனலில் இட்ட பஞ்சைப் போல சட்டெனக் காணாமல் போய்விடும் என்பது சர்வ நிச்சயம்! மன்னிக்கத் தயங்காத மனிதர்கள் தான் ஆனந்தமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். காரணம் அது மூளையை சுறுசுறுப்பாய் வைத்திருக்கிறது, தேவையற்ற மன அழுத்தங்களைத் தவிர்க்கிறது, உறவுகளைக் கட்டி எழுப்புகிறது.

# கர்த்தரின் கையில் கதாநாயகர் கதை

சர்வ வல்லமை பொருந்திய தாவீது மன்னனின் முன்னால் வந்து நின்று தீர்க்கதரிசி நாத்தான் பேசினார்.

ஒரு நகரில் இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். ஒருவன் செல்வந்தன். இன்னொருவன் ஏழை. செல்வந்தனிடம் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. அந்த ஏழையிடம் இருந்ததோ ஒரே ஒரு ஆட்டுக்குட்டி. அது அவனோடும், அவனது குழந்தைகளோடும் விளையாடி ஆனந்தமாய் இருந்தது. அந்த ஏழை அதை விலைக்கு வாங்கியிருந்தான். அவனது மடியில் உறங்கி, அவனது பாத்திரத்தில் உண்டு, அது அவனது மகனைப் போலவே இருந்தது.

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் செல்வந்தனிடம் வந்தான். வழிப்போக்கனுக்கு உணவு தயாரிக்க செல்வந்தன் முடிவு செய்தான். அதற்காக தனது மந்தையிலிருந்து ஆட்டை எடுக்காமல், அந்த ஏழையின் ஒரே ஒரு ஆட்டைக் கொன்று உணவு தயாரித்தான்.

நாத்தான் சொல்லி முடித்ததும் தாவீது மன்னன் கோபத்தில் எழுந்தான். யாரது? அவன் சாகவேண்டும். இரக்கமின்றி செயல்பட்ட அவன் யார்? சொல்லுங்கள். தாவீது கர்ஜித்தான்.

அது நீ தான்! நீயே அம்மனிதன். நாத்தான் மன்னனின் முன்னிலையில் நின்று அச்சமின்றி குரலுயர்த்தி, கைநீட்டி அதிகாரமாய்ப் பேச அதிர்ந்து போனான் தாவீது!

தீர்க்கதரிசிகளின் இயல்பே அது தான். அவர்கள் தேவனின் வார்த்தைகளை பிறருக்கு எடுத்துரைக்கப் பிறந்தவர்கள். எந்த சபையிலும் நின்றும் உண்மையை உரக்கச் சொல்லத் தயங்குவதில்லை. எந்த மன்னனுக்கு எதிராகவும் குரலுயர்த்த அஞ்சுவதில்லை. தேவனின் வார்த்தையை மேடைக்கு ஏற்றார்போல மாற்றிப் பேசுவதில்லை. தாவீது அதிர்ந்து போய் நிற்க நாத்தான் தொடர்ந்தார். அவருடைய குரல் தேவனின் குரலாய் எழுந்தது.

''இதோ தேவன் சொல்கிறார். உன்னை இஸ்ரவேலரின் மன்னனாக்கினேன். ஏராளமான மனைவியர் தந்தேன். நீயோ ஏத்தியனான உரியாவைக் கொன்று அவனுடைய மனைவியை அபகரித்தாய். இனிமேல் உன் குடும்பத்திலிருந்து எனது கோபம் விலகாது.''



நாத்தானின் தீர்க்கதரிசனத்தைக் கேட்ட தாவீது மனம் வருந்தினார். ‘‘ஐயோ தேவனுக்கு எதிராய் பாவம் செய்து விட்டேனே’’ என புலம்பினார்.

நாத்தான் தாவீதைப் பார்த்தார். ‘‘நீ மனம் வருந்தியதால் தேவன் உன்னை மன்னிக்கிறார். ஆனாலும் உனது மீறுதலுக்குத் தண்டனையாக உனக்குப் பிறக்கும் மகன் சாவான்’’ என்றார்.

தாவீதுக்கும், அவன் அபகரித்த மனைவியாகிய பத்சேபாவுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. நாத்தான் சொன்னது போலவே அந்தக் குழந்தை நோய்வாய்ப்பட்டு சாகக் கிடந்தது. தாவீது அந்தக் குழந்தைக்காக சாப்பிடாமல் இருந்து தேவனிடம் மன்றாடினார். ஏழாவது நாள் குழந்தை இறந்தது. அந்தச் செய்தியை மன்னனிடம் சொல்லவே பணியாளர்கள் அஞ்சினார்கள். ஆனால் செய்தியைக் கேள்விப்பட்ட தாவீது கலங்கவில்லை. எழும்பினார். தேவனின் வார்த்தை நிறைவேறியதைப் புரிந்து கொண்டார். உணவு சாப்பிட்டார்.

‘‘மன்னரே, குழந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்தப்போ சாப்பிடாமல் அழுது புலம்பினீர்கள். குழந்தை இறந்தபின் துக்கம் கொண்டாடாமல் உணவு அருந்தி சகஜ நிலைக்கு வந்திருக்கிறீர்களே?’’ என அவர்கள் ஆச்சரியமாய்க் கேட்டார்கள்.

‘‘குழந்தை இறக்கும் முன் தேவன் ஒருவேளை மனமிரங்குவார் என உண்ணா நோன்பு இருந்து மன்றாடினேன். இப்போது குழந்தை இறந்துவிட்டது, இனி அழுது புலம்பி என்ன ஆகப்போகிறது’’ என்றார் தாவீது.

தாவீதுக்கும் பத்சேபாவுக்கும் பின்னர் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தான் ஞானத்தினால் உலகை ஆண்ட சாலமோன் மன்னன். அப்போது நாத்தான் வந்து அவர்களை வாழ்த்தினார். எபிரேய மொழியில் நாத்தான் என்பதற்கு ‘‘தேவன் கொடுத்தார்’’ என்று பொருள். தாவீது மன்னனிடம் கடைசி வரை தேவனின் திட்டத்தைப் பகிர்ந்து கொள்பவராக நாத்தான் இருந்தார். அதனால் தனக்கும் பத்சேபாவுக்கும் பிறந்த ஒரு குழந்தைக்கு நாத்தான் எனும் பெயரை தாவீது வைத்தார். தாவீது மன்னன் தேவனின் ஆலயத்தைக் கட்ட மாட்டார், சாலமோனே கட்டுவார் என்று தேவவாக்கு உரைத்தவர் நாத்தான் தான். அவரே தான் சாலமோன் மன்னன் அரியணை ஏறவும் முக்கிய காரணமாக இருந்தார். தீர்க்கதரிசிகள் சில முக்கியமான குணாதிசயங்கள் கொண்டிருந்தார்கள். தேவனுடனான நேரடி தொடர்பு அவர்களுக்கு இருந்தது. தேவன் சொன்னதைச் சொன்னபடி பிறரிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

தேவனைத் தவிர எதற்கும் அவர்கள் அஞ்சவில்லை. இழப்புகள், வலிகள், தண்டனைகள் எதுவுமே அவர்களை திசை திருப்புவதில்லை. உலகம் சார்ந்த எந்த ஆசையையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. தங்களை எப்போதுமே அவர்கள் தாழ்த்தி தேவனையே உயர்த்திப் பிடித்தார்கள். தொலை தூரங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை அவர்கள் தேவன் அருளால் காணும் தன்மை பெற்றிருந்தார்கள். முழு மனதோடு ஒரு விஷயத்தைச் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இரக்கம், மனிதநேயம், பரிவு, இறை சமாதானம், பொறுமை போன்றவை அவர்களிடம் இருந்தது.

---

21ஆம் பக்கத்தின் விடைகள்

**பரிசுத்த வேதாகமத்தில் காண்டாமிருகம் என்ற சொல் வரும் வசனங்கள்:**

எண்ணாகமம் 23:22, எண்ணாகமம் 24:8, உபாகமம் 33:17, யோபு 39:9, யோபு 39:10, சங்கீதம் 22:21, சங்கீதம் 29:6, சங்கீதம் 92:10, ஏசாயா 34:7

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும்,
என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும். 2 நாளாகமம் 7:15



ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

நடத்தும்

# தொடர் எழுப்புதல் ஜெபக்கூடுகை

**16 SEP திங்கள் 2024**

**9 AM TO 2 PM**



முடிவிலே ஆசீர்வாதமான உணவு உண்டு

அரசாங்க விடுமுறை

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

Pastor
**OSBORNE JEBADURAI**

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024
தொடர்புக்கு : 9884908777, 9003067777

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



# அதிகாலையில் பரிசுத்த ஆவியானவரோடு



- அதிகாலை ஜெபம்
- அதிகாலை ஆராதனை
- அதிகாலை ஸ்தோத்திரபலி

**தினமும் காலை மணிமுதல் 5:00 6:00 மணிவரை**

நேரடியாக கலந்துகொண்டு பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.



Pastor
**OSBORNE**
Jebadurai

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com